STC.No. 2011/2021 குறுக்கு விசாரணை - நாள். 11.01.2024

**குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனு தாககல் செய்யபட்டு Crl.MP.No.12127/2023 நாள் 14.12.2023 மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் புகார்தாரர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**புகார்தாரர் - 1 ஜெயராஜ் த/பெ. சிங்கராஜ்,**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை.-**

1) நான் வீடு கட்டி விற்கும் தொழில செய்து வருகிறேன். JRK என்கிற நிறுவனத்தை நடத்தி மேற்கண்ட தொழிலை செய்து வருகிறேன். 21, உப்புகார தெரு, மன்னார்குடி என்ற இடத்தில் நிறுவனம் நடத்தி வருகிறேன்.

2) ஒரு நிறுவனம் நடத்த வேண்டுமானால் அரசாங்கத்தில் கம்பெனி சட்டத்தின் படி பதிவு அனுமதிப்பெற வேண்டும். அதுபோன்று இந்த நிறுவனம் அரசாங்கத்தால் அனுமதிவழங்கப்படவில்லை என்றால் - சரிதான்.

3) நான் எத்தனை வீடு கட்டி விற்றிருக்கிறேனா என்றால் - 50 வீடு கட்டி விற்றுயிருக்கிறேன். மேற்படி தொழிலுக்கு அரசாங்கத்திற்கு வரி கட்டியுள்ளீர்களா என்றால் - நான் தொழில் வரி கட்டுகிறேன். GST கட்டவில்லை. மன்னார்குடி நகராட்சியில் அனுமதிப்பெற்று தொழில் வரி கட்டிவருகிறேன். நீதிமன்றத்தில் தொழில் வரிக்கான ஆவணத்தை சமர்ப்பிக்க முடியுமா என்றால் - முடியும்.

4) நான் வருமான வரி கட்டுகிறேன் என்றால் - கட்டுகிறேன். 10 ஆண்டு காலமாக வருமான வரி செலுத்துகிறேன். நான் என்னுடைய தனிப்பட்ட பெயரில் வருமான வரி கட்டுகிறேன். என்னுடைய பான் நம்பரை என்னால் பார்த்து சொல்ல முடியும். பான் நம்பரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலும்.

5) வழக்கு சம்பந்தமாக 03.09.2021 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் நான் எந்த தேதி யில் எங்கு வை த்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் - இல்லை.

6) நான் நீதிமன்றத்தில் தாககல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் மற்றும் புகார் மனுவிலும் எந்த தேதியில் எந்த மாதம் எந்த ஆண்டில் எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை சொல்லப்படவில்லை என்றால் - சரிதான்.

7) 7 வது மாதம் 2018 ல் இந்த பணத்தை நான் எதிரிக்கு கொடுத்தேன். 2018 மார்ச் முதல் 2019 மார்ச் வரை உள்ள காலம் வருமான வரி செலுத்து காலம் என்றால் - சரிதான். என்னுடைய வருமான வரி கணக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக 2018-2019 க்கான வருமான வரி கணக்கில் நான் சொல்லவில்லை.

8) நான் 20 லட்சத்தை எந்த முறையில் எதிரிக்கு கொடுத்தேன் என்ற விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு , புகார் மனு , நிரூபண ஆணையுறுதி ஆவணம் எதிலும் சொல்லவில்லை என்றால் - சரிதான்.

9) நான் 20 லட்சத்தை பணம் எதிரிக்கு கொடுக்கும் போது எதாவது ஒரு ஆதாரவு ஆவணம் எழுதி வாங்கவேண்டும் என்று எனக்கு தோன்றயதா என்றால் - தோன்றவில்லை. அவர் நீண்ட நண்பர் என்பதால் எனக்கு தோன்றவில்லை.

10) எனக்கு சிட்டியூனியன் வங்கி, மன்னார்குடி கணக்கு இருக்கிறது. அதனை தாக்கல் செய்யமுடியும். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி , காந்திரோடு, மன்னார்குடி. கணக்கு இருக்கிறது. அதனை தாக்கல் செய்யமுடியும்.

11) 7 வது மாதம் 2018 ல் மேற்படி இரண்டு வங்கி கணக்குகளிலும் அதிகபட்சமாக 10 ல் இருந்து 15 லட்சம் இருப்பு இருந்தது. South Indian Bank, Mannargudi எனக்கு தெரியும். அங்கு எதிரிக்கு கணக்கு இருக்கும் விபரம் எனக்கு தெரியும்.

12) 2019-2020 ல் காலகட்டத்தில் நான் சொல்லிகிற நேரத்தில் சொல்கிற காலகட்டத்தில் 23.01.2019 அன்று காசோலை எண்835810 ரூ.5 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

13) 25.01.2019 ஆம் தேதி காசோலை எண்.835811 ரூ.5 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

14) 09.07.2019 ஆம் தேதி காசோலை எண்.1001605 ரூ.2 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

15) 11.10.2019 ஆம் தேதி காசோலை எண்.1001619 ரூ.2 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

16) 17.03.2020 ஆம் தேதி காசோலை எண். 1003097 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

17) 09.06.2020 ஆம் தேதி காசோலை எண். 53508 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

18) 14.10.2020 ஆம் தேதி காசோலை எண்.1004128 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து நான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் - சரிதான்.

19) இதே 20 லட்சம் தொகைக்கு என்னால் இவ்வழக்கிற்கு முன்பு 23.01.2021 ஆம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பி எதிரியானவர் 25.01.2021 பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் - சரிதான்.

20) இந்த கடனுக்கான இந்த வழக்கு மூலம் 25.01.2021 ல் இருந்து 45 நாட்கள் என்று நிறைவடைகிறதோ அன்றைய தினத்தில் இருந்து தான் துவங்குகிறது என்றும் நான் பொய்யான வழக்கை இந்த எதிரியுடன் தொடர்பு படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. இந்த வழக்கிற்கான வழக்கு மூலம் சட்டப்படி ஏற்க தகுந்தது வழக்கு மூலம் அல்ல என்றால் - சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறோரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/--------

M. Sureshkarthik,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**மன்னார்குடி.**